## பட்டு விவசாயிகளுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு

கோவை,ஈரோடு,சேலம், நாமக்கல் போன்ற பல மாவட்டங்களில் மல்பரியில் பப்பாளி மாவுப்பூச்சியின் தாக்குதலால் மல்பரி அதிகமாக பாதிக்கப்பட்டு பெரிய இழப்பினை ஏற்படுத்தி உள்ளது. தற்பொழுது மாவுப்பூச்சியினை கட்டுப்படுத்திட மூன்று ஒட்டுண்ணிகள் கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் பெருக்கம் செய்யப்பட்டு வயலில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒட்டுண்ணிகள் விபரம்

1) அசிரோபேக்கஸ் பப்பாயி
2) அனாகரஸ் லோக்கி
3) சூட்லெப்டோ மாஸ்டிக்ஸ்  மெக்சிகானா

உயிரியல் முறையில் பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவதற்கு புதிதாக வெளியிடப்பட்டுள்ள இம்மூன்று ஒட்டுண்ணிகளையும், பட்டு விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக, தொடர்பு அலுவலராக (Nodal Officer) கோவை பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர், நியமிக்கப்பட்டுள்ளார். பட்டுவளர்ச்சித்துறையின் சம்மந்தப்பட்ட விரிவாக்க அலுவலர்களை தொடர்பு கொண்டு பட்டு விவசாயிகள் பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.